பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 06 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு மற்றும் சிறப்பான அரசு நிர்வாகத்தால் உலக அளவில் இந்தியாவின் புகழ் ஓங்கியுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**2)** நேரடி அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளை தவெக அரசு மேற்கொண்டுள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா கூறியுள்ளார்.

**3)** சட்டப்பேரவை நடவடிக்கைகளை தடையின்றி நேரலை செய்வதை உறுதி செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின், பேரவைத் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

**4)** சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 219 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

. . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு மற்றும் சிறப்பான அரசு நிர்வாகத்தால் உலக அளவில் இந்தியாவின் புகழ்

ஓங்கியிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஒடிஷா மாநிலம் ராய்ரங்பூரில் இன்று பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், உலகின் பல பகுதிகளில் அரசியல் நெருக்கடி நிலவி வரும் போதிலும், அதன் பாதிப்பிலிருந்து இந்தியாவை பாதுகாப்பதற்கான முயற்சிகளை பிரதமர் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

உலகத் தலைவர்களுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுக்களை பிரதமர் நடத்தி வருவதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

நேரடி அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் தவெக அரசு உரிய முயற்சிகளை எடுத்து வருவதாக மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தென்கொரியாவின் ஹூண்டாய் நிறுவனத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் மறு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மோத்தலிங் உள்ளிட்ட இரு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்திற்கு வரவேண்டிய தொழில் முதலீடுகள் ஆந்திராவுக்கு சென்று விட்டதாக கூறப்படுவது குறித்து, சட்டப்பேரவையில் பதிலளிக்க தாம் தயாராக இருப்பதாகவும் செல்வி கீர்த்தனா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் சூரிய மின்சக்தி திட்ட ஒதுக்கீட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் விதிமீறல்கள் நடைபெற்றுள்ளதாக மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் கூறியுள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தில் முறைகேடுகளை களைவதற்கு புதிய நடைமுறை கொண்டுவரப்படும் என்றும் தெரிவித்தார்.

திருநெல்வேலி, உடுமலை ஆகிய இடங்களில் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மின்துறை தொடர்பான வெள்ளை அறிக்கை வரும் வார இறுதிக்குள் வெளியிடப்படும் என்றும் திரு நிர்மல் குமார் கூறினார்.

<<<<<<<>>>>>>>

இளநிலை மருத்துவப்படிப்புக்கான நீட் மறுதேர்வு நாளை நடைபெறுகிறது.

தமிழகத்தில் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர்கள் மன அழுத்தம் இல்லாமல் தேர்வை எழுத வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

***(Sound Byte — அருண்ராஜ் - 43 Sec.)***

<<<<<<<>>>>>>>

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகளை கோவில் நிர்வாகம் செய்து தர வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு மதன் ராஜா அறிவுறுத்தியுள்ளார்.

இத்திருக்கோவிலில் ஆய்வு மேற்கொண்ட அவர், 22 தீர்த்த கிணறுகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கோவில் மற்றும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பக்தர்களுக்கு அளிக்கப்படும் உணவையும் திரு மதன் ராஜா ஆய்வு செய்தார்.

<<<<<<<>>>>>>>

சட்டப்பேரவை நடவடிக்கைகளை தடையின்றி நேரலை செய்வதை உறுதி செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின், பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சட்டப்பேரவை நடவடிக்கைகள் நேரலை செய்யப்பட்டால்தான் நல்லதொரு ஆக்கப்பூர்வமான சட்டப்பேரவை ஜனநாயகத்திற்கு வழிவகுக்கும் என்று கூறியுள்ளார்.

மேகதாது அணை கட்டுவதை கண்டித்து கொண்டுவந்த தீர்மானத்தின் மீதான விவாதங்கள் சட்டப்பேரவையில் நடைபெற்றபோது அவை அனைத்தும் நேரலை செய்யப்பட்டன என்றும், ஆளுநர் உரை மீது எதிர்க்கட்சிகள் தெரிவித்த கருத்துகள் நேரலையிலிருந்து துண்டிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியினரின் விவாதங்களை வாக்களித்த மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்றும், அவற்றை ஊடகங்களுக்கு வழங்க மறுக்கும் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்காக ஆக்கப்பூர்வமான எந்த நடவடிக்கையையும் தவெக அரசு எடுக்கவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஈரோடு மாவட்டம் பவானியில் மூதாட்டி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி வேதனை அளிப்பதாக கூறியுள்ளார்.

திரு விஜய் தலைமையிலான அரசின் மெத்தன போக்கால் பச்சிளம் குழந்தை முதல் மூதாட்டி வரை அனைவரின் பாதுகாப்பும் சூறையாடப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது தூய சக்தி என்று முழங்கிவிட்டு ஆட்சி அமைத்ததும் மௌனம் காப்பது, மகளிரின் பாதுகாப்பு குறித்து கவலைப்படாமல் இருப்பதுதான் மாற்றமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தவெக அரசு முழுகவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 43 Sec. )***

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே வெலிங்டன் நீர்தேக்கப்பகுதியில் **130** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் இன்று ஆய்வு செய்தார்.

---------------

ஈரோட்டில் தூய்மைப் பணியாளர்களுக்கு சீருடைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு விஜய் பாலாஜி இன்று வழங்கினார்.

------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சாலவாக்கம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் வரும் 30-ஆம் தேதிவரை நடைபெறும் நேரடி சேர்க்கையில் மாணவர்கள் சேர்ந்து பயனடையுமாறு ஆட்சியர் திருமதி சினேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் தொடர்பான தகவல்களை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி விவசாயிகள் பயன்பெறுமாறு ஆட்சியர் திருமதி பிரியா கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------------

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் தனியார் கல்லூரியில் மாணவர்கள் யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

-------------------

சேலம் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளியில் 100 மாணவர்கள் பங்கேற்ற யோகாசன நிகழ்ச்சி நடைபெற்றது.

---------------

திருவண்ணாமலை மாவட்டம் தானிப்பாடியில் சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில், குழந்தை திருமண தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தனியார் பள்ளியில் இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் **219** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் இந்தியா சற்றுமுன்வரை ஒன்பது புள்ளி ஒரு, ஓவரில், விக்கெட் இழப்பின்றி **82** ரன் எடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான், **44** புள்ளி இரண்டு ஓவரில், **218** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியாவின் வேகபந்து வீச்சாளர் **Prasidh Krishna** ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

-----------------

ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் — வேலவன் செந்தில்குமார் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-7, 11-9** என்ற செட் கணக்கில், மலேசியாவின் ஜீவா **Lee** இணையை வென்றது.

<<<<<<<<**END**>>>>>>>>